सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# சுதந்திர தின உரை

திரு **வே. நாராயணசாமி**
மாண்புமிகு முதலமைச்சர்



150 YEARS OF CELEBRATING THE MAHATMA

15 ஆகஸ்ட், 2019

# சுதந்திர தின உரை

15 ஆகஸ்ட் 2019

*நமது இந்தியத் திருநாட்டின் 73ஆவது சுதந்திரத் திருநாளை நாம் அனைவரும் பெருமையுடன் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த இனிய நன்னாளில், எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தையும் உளங்கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.*

**இ**ந்த மாநிலத்தில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பிற தோழமைக் கட்சிகள் இணைந்து மதச்சார்பற்ற ஆட்சி அமைவதற்கு நல்லாசிகளை வழங்கிய அன்னை சோனியா காந்தி, அருமைத் தலைவர் ராகுல் காந்தி, முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர், தமிழகத்தின் விடிவெள்ளி தலைவர் மு.க. ஸ்டாலின் ஆகியோருக்கு உளமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பெருமை மிகுந்த இந்த புதுச்சேரி மாநிலத்தின் முதலமைச்சர் என்கிற முறையில், இங்கு இந்த மூவர்ணக் கொடியை ஏற்றிவைத்து உங்கள் முன் உரையாற்றுகின்ற இந்த இனிய நன்னாளில், நாட்டின் விடுதலை வேள்வியில் பங்குபெற்று தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்த

ஆயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவுகூருகிறேன். அவர்களது தியாகங்கள் ஈடுசெய்ய முடியாதவை. மதிப்புமிக்க அவர்களது தியாகங்களை நன்றியோடு நினைத்துப் போற்றுவது நம் அனைவரது கடமையாகும். இத்தருணத்தில், நமது நாட்டின் சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் உங்கள் சார்பாக எனது வீர வணக்கங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்தியத் திருநாட்டைத் தனித்தன்மை மிக்க நாடாக உயர்த்துவதற்கு அயராது பாடுபட்ட தேசப்பிதா மகாத்மா காந்தி, நவபாரதச் சிற்பி ஜவஹர்லால் நேரு, திருமதி இந்திரா காந்தி, கவிக்குயில் சரோஜினி நாயுடு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், சர்தார் வல்லபபாய் பட்டேல், பெருந்தலைவர் காமராசர் ஆகியோர் வகுத்துக் கொடுத்த நெறிகள்தான், இன்றும் இந்த தேசத்தை அதன் ஆன்மாவாக இருந்து இயக்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் இட்ட அடித்தளம் தான், இன்றும் இந்தியாவை உலக அரங்கில் தனித்துவமாக உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

நம் அரசின் மக்கள் நலம் சார்ந்த திட்டங்களால் புதுச்சேரி மாநிலம் பல துறைகளில் ஓங்கி வளர்ந்து வருவதை கண்கூடாக நாம் பார்த்து வருகிறோம். புதுச்சேரி மாநிலத்தை அனைத்துத்

துறைகளிலும் முன்னோடி மாநிலமாக உயர்த்துவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டு எங்கள் அரசு செயல்பட்டு வருவதே இதற்குக் காரணம்.

ஒருபுறம், மத்திய அரசு நமக்கு அளித்து வந்த கொடை வெகுவாகக் குறைக்கப்பட்டுவிட்டது; மற்றொருபுறம், ஆண்டுதோறும் மத்திய அரசின் நிதியைப் பெறுவதென்பது மிகப்பெரிய சவாலாக உருவெடுத்து வருகிறது. இருப்பினும், எங்கள் அரசு, இந்தப் பிரச்சனைகளையெல்லாம் தீவிரமாக எதிர்கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறக்கூடிய வகையில் பல்வேறு மக்கள் நலப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது. இந்த நன்னாளில், கடந்த மூன்று ஆண்டுகளில் புதுச்சேரி மாநில மக்களின் நலனுக்காகவும், மாநிலத்தின் வளர்ச்சிக்காகவும் எங்கள் அரசு நிறைவேற்றியுள்ள மற்றும் நிறைவேற்ற எண்ணியுள்ள பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து உங்களிடம் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

கடந்த 2018-19ஆம் நிதியாண்டில் புதுச்சேரி மாநிலத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கிய திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ₹ 7,416 கோடி. இதை செலவிட்டு பல மக்கள் நலத்திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். வணிகவரித்துறையானது, 2018-19ஆம் நிதியாண்டில், ₹ 2,131 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. நடப்பு நிதியாண்டில், சூலை மாதம் வரை ஈட்டிய தொகை ₹ 767 கோடி ஆகும்.

2019ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி, புதுச்சேரி யூனியன் பிரதேச மக்கள் தொகை 13,94,026 ஆகும். இதில் சுமார் 96 விழுக்காடு மக்கள் ஆதார் எண்ணோடு இணைக்கப் பட்டுள்ளனர். ஏழை மற்றும் நலிந்த பிரிவு மக்களின் நலனுக்காக தொடங்கப்பட்ட பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் (PMSBY) 2,27,800 பயனாளிகளும், மற்றொரு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் (PMJJBY) 77,738 பயனாளிகளும், அடல் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் (APY) 31,605 பயனாளிகளும் பதிவு செய்யப் பட்டுள்ளனர் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேசத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வேளாண் பெருமக்களின் நலனைக் காத்திட, எங்கள் அரசு வேளாண்மை வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை வழங்கி வருகிறது. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம், பால் வளம், வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய 22 திட்டங்களைச் செயல்படுத்த கடந்த ஆண்டு ₹ 948 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பயிர்க் காப்பீட்டுத் திட்டம், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு செலுத்திடும் பிரிமியத்

தொகையுடன், விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையையும் புதுச்சேரி அரசே விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டு செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், புதுச்சேரியில் 4294.13 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 4,997 விவசாயிகளும், காரைக்கால் பகுதியில் 4878.55 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 4,803 விவசாயிகளும், ஏனாம் பகுதியில் 231.27 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 473 விவசாயிகளும் பயன் பெற பதிவு செய்துள்ளனர். பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் புதுச்சேரியில் 86 விழுக்காடும், காரைக்காலில் 96 விழுக்காடும், ஏனாம் பகுதியில் 100 விழுக்காடும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி பகுதியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் காரைக்கால் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஆகியவை மின்னணு முறையிலான வேளாண் விளைபொருட்கள் சந்தைத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளன. கைப்பேசி செயலி மூலம் உளுந்து, பச்சைப்பயறு, திணை, கேழ்வரகு, கம்பு ஆகிய பயிர்களுக்கு ஆன்லைன் வர்த்தகம் நடைபெற உறுதி செய்யப்பட்டுள்ளது. 92 உரிமம் பெற்ற வியாபாரிகளும், 8,500 விவசாயிகளும் இணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மின்னணு எடை மேடைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மின்னணு விலைப்பலகைகள் மற்றும்

சிசிடிவி கேமராக்கள் பாதுகாப்புக் கருதி பொருத்தப்பட்டுள்ளன. தேசிய வேளாண் விளைபொருட்கள் விற்பனைச் சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ள தட்டாஞ்சாவடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தென்னிந்தியாவிலேயே வை-ஃபை (Wi-Fi) வசதி செய்யப்பட்ட முதல் விற்பனைக்கூடமாகும். விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இவ்வசதியினை இலவசமாக பெற்றுப் பயனடைய முடியும்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவித்து புதுச்சேரி மாநிலத்தை இயற்கை வேளாண்மை மையமாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, இயற்கை வேளாண்மை நிலப்பரப்பை அதிகரிக்கவும், இயற்கை வேளாண் விளைபொருட்கள் சான்றளிப்பு குறித்த புரிதலை ஏற்படுத்தவும் உகந்த வேளாண் திட்டங்களைப் புதுச்சேரி மாநிலத்தில் செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து முதல் தவணையாக நிதியும் பெறப்பட்டுள்ளது. புதுச்சேரியில் 400 ஹெக்டேரிலும், காரைக்காலில் 150 ஹெக்டேரிலும் இயற்கை வேளாண்மை நிறுவனங்களின் பங்களிப்புடன் இயற்கை வேளாண் முறைகளைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலும், புரதச்சத்துமிக்க உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கிலும், கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரித்து அவற்றின் நலம் பேண எங்கள் அரசு முக்கியத்துவம் அளித்து

வருகிறது. கடந்த ஆண்டு 48,301 மெட்ரிக் டன் அளவிற்கு புதுச்சேரியில் பால் உற்பத்தி செய்யப்பட்டது. பால் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கும் வகையில், மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து, புதிதாக கறவைமாடுகள் வழங்கவும், விவசாயிகளின் பால் உற்பத்தி செலவினங்களைக் குறைத்திடவும், கறவைமாடு மற்றும் கன்றுத் தீவனம் 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கவும் இவ்வாண்டு அரசாணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1,715 மாடுகளும், 694 கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பு நிதியாண்டில், மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு 6,000 கறவைமாடுகள் 25 விழுக்காடு மானியத்தில் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டில், மாநில நிதியிலிருந்து முருங்கப்பாக்கம் கிராமத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து செல்லிப்பட்டு கிராமத்திலும் தலா ஒரு கால்நடை இன அபிவிருத்தி கிளை நிலையம் கட்டப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் ஏற்பட்டு வரும் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் அண்டை மாநிலங்களில் உள்ள பல்வேறு மத்திய ஆராய்ச்சி

நிறுவனங்களான, (1) இந்தியத் தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம், கர்நாடகா, (2) இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம், கேரளா, (3) தேசிய தாவர சுகாதார மேலாண்மை நிறுவனம், ஹைதராபாத், (4) வன மரபியல் மற்றும் மரவளர்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர், (5) மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், கர்நாடகா மற்றும் (6) மண்டல இயற்கை வேளாண்மை மையம், கர்நாடகா ஆகியவற்றை மாண்புமிகு வேளாண் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார். கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை வழங்குதல், தொழில் அபிவிருத்தி, தொழில்நுட்ப வணிகமயமாக்கல் ஆகியவற்றின் மூலம் விவசாயிகள் மற்றும் சிறு தொழில்முனைவோர் போன்றோர் தங்களது வருமானத்தை ஈட்டுதல் மற்றும் வேளாண் தொழிற் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் புதுச்சேரி அரசின் வேளாண் துறைக்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்க மேற்சொன்ன நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

புதுச்சேரி மாநில விவசாயிகள் தங்களின் வருமானத்தை மேம்படுத்த ஏதுவாகவும், விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ளவும், புதுச்சேரிக்கு ஏற்ற பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள், விவசாய செயலாக்க தொழில்நுட்பங்கள், வேளாண் வணிகத் திட்டங்களில் பயிற்சி போன்றவற்றைப்

பெற்றிடவும், விவசாயிகள் மற்றும் ஆர்வமுள்ள தனிநபர்களை மேற்கண்ட ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி மாநிலத்தில் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் கல்வியின் முக்கியத்துவத்தை எங்கள் அரசு நன்கு உணர்ந்துள்ளது. கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், அரசுப் பள்ளிகளில் தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் முறைகளை ஏற்படுத்தவும், ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கவும், அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளிலும் டிஜிட்டல் வகுப்பறைகள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூரணாங்குப்பம் அரசு நடுநிலைப் பள்ளியில் உள்ள வகுப்பறைகள் நவீன வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப்பட்டு 24-8-2018 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதேபோல், காரைக்கால், திருநள்ளாறு அரசுத் தொடக்கப் பள்ளிகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்பட்டு கடந்த 11-2-2019 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஜீவானந்தம் அரசு மேனிலைப் பள்ளியிலும் ஸ்மார்ட் வகுப்பறைகள் திறக்கப்பட்டுள்ளன. இதுவரை, தனியார் பங்களிப்புடன் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சுமார் 75 வகுப்பறைகள் ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப்பட்டுள்ளன.

10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டிலேயே முதன்முறையாக புதுச்சேரியில் அனைத்து உயர்கல்வி படிப்பிற்கான சேர்க்கைக்காக இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் புதிய முறை கடந்த ஆண்டு முதல் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய கல்லூரி தரவரிசைப் பட்டியலில் (National Institute of Ranking Framework) புதுச்சேரியைச் சார்ந்த பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரி, தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இந்திராகாந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகள் முக்கிய இடங்களைப் பெற்றுள்ளன.

கல்லூரி மாணவர்கள், அலுவலர்களின் வருகைப் பதிவு விவரங்கள், மாணவர்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் இதரப் பணிகளை அறிந்து கெள்ளும் வகையில், புதிதாக ஒரு ‘கல்லூரி மேலாண்மைத் திட்டம்’ (College Management System) தொடங்கப்பட்டுள்ளது. கற்பித்தல், மதிப்பீடு முறை மற்றும் மாணவர்கள், அலுவலர்களின் சுயவிவரங்கள் உள்ளிட்டவற்றை இந்த புதிய திட்டம் மூலம் அனைவரும் அறிந்துகொள்ளலாம். பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரியை, ஒரு புதுச்சேரி

தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்ற, மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை இத்தருணத்தில் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

கல்லூரிகளில் காணொலிக் காட்சி (வீடியோ கான்பரென்சிங்) வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தமிழுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் காரைக்காலில் புதிதாக கட்டப்பட்டுள்ள "டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி பட்ட மேற்படிப்பு மையம்" 26-2-2019 அன்று திறந்து வைக்கப்பட்டதை இங்கு மகிழ்ச்சியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

பள்ளிக்கல்வியோடு விளையாட்டையும் ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எங்கள் அரசு மேற்கொண்டு வருகிறது. மாணவர்களிடம் விளையாட்டு ஆர்வத்தை மேலும் அதிகரிக்க மாநில மற்றும் மண்டல அளவிலான பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதம், மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படும். அதற்கு முன்னதாக மண்டல அளவிலான போட்டிகள் நடத்தப்படும். அனைத்துப்

பள்ளிகளும் போட்டிகளில் பங்கு பெறுவதைக் கட்டாயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கால்பந்து விளையாட்டின்மீது மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் மண்டல அளவில் (Zonal Level) வெற்றி பெறும் பள்ளிக்கு கல்வி அமைச்சர் விருது மற்றும் ஊக்கத்தொகையும், மாநில அளவில் வெற்றி பெறும் பள்ளிக்கு முதலமைச்சர் விருது மற்றும் ஊக்கத்தொகையும் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக புதுச்சேரி மாநிலம், கால்பந்து விளையாட்டில் தேசிய அளவில் முக்கியத்துவம் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கூடைப்பந்து, மல்யுத்தம், சறுக்கு விளையாட்டு, பூப்பந்து விளையாட்டு உள்ளிட்ட விளையாட்டுகளில் தேசிய அளவில் விருது பெறும் மாணவ, மாணவியர்களுக்கும் மாநில விருதுடன் சேர்த்து ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

சுகாதாரச் சேவையில் புதுச்சேரி மாநிலம் மிகவும் முன்னேறிய மாநிலமாகத் தொடர்ந்து திகழ்ந்து வருவது நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும். பல்வேறு குடும்பநலத் திட்டங்கள் மூலமாகவும், சிறப்பு சுகாதாரத் திட்டங்கள் மூலமாகவும் சுகாதாரச் சேவைகளை எங்கள் அரசு மேம்படுத்தி வருகிறது. வில்லியனூரில் ₹ 7.93 கோடி மதிப்பில் 50 படுக்கைகள் கொண்ட ஆயுஷ் மருத்துவமனை அமைப்பதற்கான பணி கடந்த 22-2-2019 அன்று தொடங்கப்பட்டது.

81 துணை மருத்துவ மையங்கள் மற்றும் 40 ஆரம்ப சுகாதார மையங்கள் ஆகியவற்றை சுகாதாரம் மற்றும் நல மையங்களாக மாற்றுவதோடு மட்டுமல்லாது கிராமப்புற மருத்துவமனைகளுடன் புதுச்சேரி அரசு பொது மருத்துவமனையை இணைத்து சிறப்பான காணொலி மருத்துவ வசதி (Tele-medicine Facility) ஏற்படுத்தப்படும் என்பதை இத்தருணத்தில் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம், சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பொதுமக்கள் அவர்களுக்கு அருகில் உள்ள மருத்துவ மையங்களிலிருந்தே நேரடியாகப் பெறமுடியும். நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களுக்கான ஒரு மருத்துவ அதிகாரி அனைத்து மையங்களிலும் இருப்பதுடன், இந்த மையங்களில் யோகா வகுப்புகளும் நடத்தப்படும்.

மேலும், காணொலி மருத்துவ வசதியானது (Tele-medicine Facility) புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, காரைக்கால் அரசு பொது மருத்துவமனை மற்றும் ஏனாம் அரசு பொது மருத்துவமனைகளுக்கிடையே ஏற்படுத்தப்படும் என்பதையும் மகிழ்வுடன் நான் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

சமுதாயத்தில் நலிந்த ஏழை, எளிய மக்கள் பாதுகாப்போடும் நம்பிக்கையோடும் வாழ்வதற்கேற்ற சாதகமான சூழ்நிலையை புதுச்சேரி மாநிலத்தில் உருவாக்கித்தர எங்கள் அரசு

முனைப்போடு உள்ளது. அட்டவணை இன மக்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு எங்கள் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் நோக்கில், அவர்களின் முதல் இரண்டு குழந்தைகளுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ₹ 12,000-லிருந்து ₹ 18,000-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2017-18 மற்றும் 2018-19ஆம் நிதியாண்டுகளில் சென்டாக் மூலம் தேர்வான 50 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த நாளன்றே ₹ 1.63 கோடி வழங்கப்பட்டது. மேலும், நடப்பு நிதியாண்டில் ₹ 2 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முதுநிலை மருத்துவம் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் முதுநிலை மருத்துவம் பயிலும் 3 ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு ₹ 20.57 இலட்சம் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 6 மாணவ, மாணவியருக்கு ₹ 42.69 இலட்சம் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படவுள்ளது.

பழங்குடியின மக்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஆதிதிராவிடர் நலத்துறையானது, “ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை” என்று 25-7-2019 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அண்மையில் மத்திய அரசின் மூலமாக புதுச்சேரி பழங்குடி இனத்தவருக்கான சட்டம் 2016-க்கான, குடியரசுத்தலைவர் அறிவிப்பின் ஒப்புதலை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பழங்குடியினத்தவராக இருளர் (வில்லி மற்றும் வேட்டைக்காரன்) சமுதாயத்தை அறிவித்ததன் பேரில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக கடந்த நிதியாண்டில் ₹ 15 இலட்சம் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டது. இதன்மூலம் 200 பழங்குடியின மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். நடப்பு நிதியாண்டில் ₹ 30 இலட்சம் கல்வி மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் எண்ணத்தில் மாலை நேர வகுப்புகள் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளன.

மீனவர்களின் நலனிற்காக எங்கள் அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மீன்பிடித் தடைக்கால நிவாரணம், மீனவர் ஓய்வூதியத் திட்டம், மழைக்கால நிவாரணம், மீன்பிடிப் படகுகளைப் பராமரிக்க நிதியுதவி, மீன்பிடி

படகுகளுக்குக் காப்பீட்டுத் திட்டம், மீன்பிடி உபகரணங்கள் வாங்க மானியம் போன்ற பல திட்டங்கள் மீனவ மக்களுக்காக சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

புதுச்சேரி பகுதி மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த 7 மாணவர்கள் அவர்களது பாரம்பரியத் தொழில்களில் மேன்மை அடைவதற்காக, கொச்சி, விசாகப்பட்டினம் மற்றும் சென்னையில் உள்ள மத்திய மீன்வள நிறுவனமான கடல் மற்றும் பொறியியல் பயிற்சி மையத்தில் (CIFNET) கப்பல் மாலுமிப் பயிற்சி மற்றும் கப்பல் கட்டுமானப் பயிற்சி ஆகிய இரண்டு ஆண்டு பட்டயப்படிப்பு மேற்கொள்வதற்குத் தேவைப்படும் அனைத்துச் செலவுகளையும் மீன்வளத்துறை ஏற்றுக்கொண்டுள்ளது. தற்போது அந்த மாணவர்கள் வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. புதுச்சேரி மாநிலத்தில், ₹ 81 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மீன்வள வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் அனைத்துத் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

கடலோர மீனவ கிராமமான வைத்திக்குப்பம் மரவாடி சாலையில் ₹ 1.16 கோடியில் ஒரு சிறு பாலமும், வைத்திக்குப்பம் சாலையில் பழைய வடிசாராய ஆலைக்கு அருகில்

₹ 1.19 கோடியில் ஒரு குறுகிய பாலமும் 'திட்ட அமலாக்க முகமை' மூலம் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் 10 இலட்சம் லிட்டர் கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் நோக்கில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று ₹ 3.27 கோடி செலவில் புதுச்சேரி தேங்காய்த்திட்டு மீன்பிடித் துறைமுகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது மிக விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. அதுபோல், நாள்தோறும் 25 ஆயிரம் லிட்டர் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் நோக்கில், ₹ 43.69 இலட்சம் செலவில் குபேர் மீன் அங்காடியில் கட்டப்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளது.

கடலோர கிராமங்களான முத்தியால்பேட்டை, சோலை நகர், வைத்திக்குப்பம், குருசுக்குப்பம் மற்றும் செஞ்சி சாலை ஆகிய பகுதிகளை, புதுச்சேரி வெங்கட்டா நகர் 110 / 11 கிலோ வோல்ட் துணைமின் நிலையத்தில், 16.20 கிலோ மீட்டர் நீள உயரழுத்த புதைவட மின்கம்பியை இணைக்கும் பணி, உலக வங்கி நிதியுதவியுடன் ₹ 14.90 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதன்மூலம் சுமார் ஒரு இலட்சம் மின் நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

காலாப்பட்டு தொகுதிக்குட்பட்ட கடலோர கிராமங்கள், கணபதிசெட்டிக்குளம், பெரிய காலாப்பட்டு, சின்ன காலாப்பட்டு மற்றும் பிள்ளைச்சாவடி பகுதியில் உலக வங்கி நிதியுதவியுடன் ₹ 22.03 கோடி மதிப்பில் சுமார் 158 கிலோ மீட்டர் நீள புதைவடம் அமைக்கும் பணி விரைவில் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இதன்மூலம் சுமார் 3,500 மின்நுகர்வோர் பயனடைவர்.

மாற்றுத்திறனாளிகள், முதியோர், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஏனைய நலிந்த பிரிவினர்களின் நலனிற்காக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களால் நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் உயர் அளவை நமது மாநிலம் எட்டியுள்ளது. மாற்றுத்திறனாளிகள் மற்றவர்களைச் சார்ந்து வாழாமல், இதர மனிதர்களைப் போல சமமான வாய்ப்புகளைப் பெற பல்வேறு நலத்திட்டங்களை எமது அரசு செயல்படுத்தி வருகிறது. சமூகநலத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டிற்காக ₹ 55 கோடி செலவிடப்படுகிறது. இது நிதிநிலை மதிப்பீட்டில் 73 விழுக்காடு ஆகும். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்குப் பிரத்தியேக அடையாள அட்டை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன் கீழ் புதுச்சேரி மாநிலத்திற்கான விதிகள் புதிதாக உருவாக்கப்பட்டு மாநில அரசின் ஒப்புதலுடன் 19-12-2018 அன்று அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

அரசுக் கட்டிடங்களில் மாற்றுத்திறனாளிகள் சுலபமாகச் சென்று வருவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக ₹ 5.46 கோடி ஒதுக்கீடு செய்து அதில் முதற்கட்டமாக ₹ 2.73 கோடி செலவில் கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் தொடங்கப்பட்டன. மேலும், இத்திட்டத்தின் மூலம், 21 அரசுத்துறைகளின் வலைதளங்கள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் மத்திய அரசின் எர்நெட் நிறுவனம் மூலம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேலும் 57 வலைதளங்களைச் சேர்க்கப் புதுச்சேரி தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அரசின் அனைத்துச் சேவைகளையும் துரிதமாகவும் சுலபமாகவும் பெறும் வகையில் புதுச்சேரியில் முதல்முறையாக மக்கள் குரல் என்கிற மக்கள் குறை தீர்க்கும் முகாம் கடந்த 18-9-2019 அன்று நெட்டப்பாக்கம் கிராமத்தில் நடத்தப்பட்டது. இதுபோன்ற முகாம்கள் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நடத்தி மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2030-ஆம் ஆண்டிற்குள் மக்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளைக் கணக்கில் கொண்டு அனைத்துத் தரப்பு மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், நவீன,

திறன்மிக்க, சிக்கனமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து முறையை உருவாக்குவதற்கு ஏதுவாகவும் ஒரு புதிய போக்குவரத்துக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் போக்குவரத்து அலுவலகங்களிலும் “சாரதி” மற்றும் “வாகன்” மென்பொருட்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தேங்காய்த்திட்டில் ₹ 15.75 கோடி மதிப்பீட்டில் ஆய்வு மற்றும் சான்றிதழ் வழங்கு நிலையம் அமைக்க (Inspection and Certification Centre) நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாகூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகக் காட்டுக்குப்பத்தில் அமைக்கப்பட்டுள்ள வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகக் கட்டிடம் ₹ 30.40 இலட்சம் மதிப்பில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறையின் சாலைப் பாதுகாப்பிற்கான இடைவிடாத முயற்சியினால் 2017-ஆம் ஆண்டில் 215-ஆக இருந்த விபத்து மரணங்களின் எண்ணிக்கை 2018-ஆம் ஆண்டில்-155 ஆகக் குறைந்துள்ளது. அகில இந்திய அளவில் ஒப்பிடுகையில் நமது மாநிலத்தில் விபத்தினால் ஏற்படும் மரணங்கள் பெருமளவு குறைந்துள்ளன.

புதுச்சேரி-கடலூருக்கு இடையிலான திருத்தப்பட்ட வழித்தடம் இரயில்வே துறையால் அனுமதிக்கப்பட்டு 23-5-2017 அன்று தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை விரைந்து முடிக்குமாறு கடந்த

ஆண்டு மே மாதம் இரயில்வே அமைச்சகத்திடம் வலியுறுத்தியதோடு மட்டுமின்றி, பெருநகர போக்குவரத்துத் திட்டத்தின் இறுதிகட்ட களப்பணியை முடிக்குமாறு 3-7-2019 அன்றைய தேதியிட்ட நினைவூட்டல் கடிதம் மூலமாகவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் காவல்துறை அலுவலர்கள் மூலம் இணையதளம் வாயிலாக கட்டணம் வசூலிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்து அறநிலையத்துறையின் மூலம் 2018-19-ஆம் நிதியாண்டில் 32 திருக்கோயில்களுக்கு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ₹ 1.27 கோடி வழங்கப்பட்டது. இதேபோன்று நடப்பு நிதியாண்டில் 15 திருக்கோயில்களைச் சீரமைக்க ₹ 39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் 11 திருக்கோயில்களிலும், இந்த ஆண்டில் 3 திருக்கோயில்களிலும் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டன. வீராம்பட்டினம் அருள்மிகு ஸ்ரீ செங்கழுநீரம்மன் திருக்கோயிலுக்குப் புதிய தேர் செய்ய ₹ 42.72 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தேர் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் 10 புகழ்பெற்ற திருக்கோயில்களின் வரலாறு, பூஜைகள், திருவிழாக்கள், சிலைகள் ஆகியவற்றின் விரிவான தகவல்களைச்

சேகரித்து அரசிடம் சமர்ப்பிக்க புதுச்சேரி பிரெஞ்சு நிறுவனத்திற்கு 21-1-2019 அன்று பணிஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. புதுச்சேரி மாநிலத்தில் உள்ள மசூதிகளின் பட்டியல் மற்றும் முழு விவரங்கள் அடங்கிய ஒரு புத்தகத்தை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, புதுச்சேரி வக்ஃபு வாரியம் மூலம் இசுலாமிய மாணவர்கள் 1,165 நபர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக ₹ 30.44 இலட்சம் கொடையாக வழங்கப்பட்டது. கைலாஷ்-மானசரோவர் புனித யாத்திரை மேற்கொள்ளும் இந்துக்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ₹ 50,000 நிதியுதவி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜர் வீட்டுவசதித் திட்டத்தையும், பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தையும் இணைத்து வீட்டுவசதித் திட்டத்தைப் புதுச்சேரியில் சிறப்பாக செயல்படுத்தியதற்காக புதுச்சேரி மாநிலத்திற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடமிருந்து தேசிய அளவிலான விருது கிடைத்திருப்பது, புதுச்சேரி அரசானது மக்கள் நலத்திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

நிலத்தடி நீரைப் பெருக்கும் வகையில் அனைத்து அரசு அலுவலகக் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை

அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதல்கட்டமாக, புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு 12-7-2019 அன்று அமைக்கப்பட்டது.

புதுச்சேரியில் தொழில் தொடங்குவதை எளிமைப்படுத்தும் வகையில் பிரத்யேக இணையதள சேவை 3-7-2019 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், புதிதாகத் தொழில் தொடங்குவோர் தங்கள் தொழிலுக்குத் தேவையான அனைத்து அனுமதி மற்றும் ஒப்புதல்களையும் இணையதளம் வாயிலாக விரைவில் பெறமுடியும்.

புதுச்சேரியில் சட்டம்-ஒழுங்கு மிகச் சிறப்பாக பேணப்பட்டு வருகிறது. புதுச்சேரியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு சைபர் குற்றத் தடுப்பு ஆய்வகம் மற்றும் புதுச்சேரியில் போக்குவரத்தைச் சீரமைக்கும் வகையில் போக்குவரத்து மேலாண்மை கண்காணிப்புப் பிரிவு ஆகியவை கடந்த 26-7-2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. தேசிய அளவில் சிறந்த 10 காவல் நிலையங்களில் நெட்டப்பாக்கம் காவல் நிலையம் 4வது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது. எமது அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் விளைவாக காவலர் தேர்விற்கான வயது வரம்பு 22-லிருந்து 24-ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இந்தியாவில் உள்ள சிறிய மாநிலங்களில் நமது புதுச்சேரி மாநிலம் சட்டம்-ஒழுங்கு, விவசாயம், சுற்றுலா, சுகாதாரம், தூய்மை ஆகிய துறைகளில் முதன்மை மாநிலம் என்ற பரிசினையும், பாராட்டுக்களையும் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக 'இந்தியா டுடே' குழுமம் மூலம் பெற்று வருகிறது. மேலும், சிறிய மாநிலங்களில் புதுச்சேரி மிகச் சிறப்பாக செயல்படுகின்ற மிகச்சிறந்த மாநிலம் எனவும் பரிசு பெற்றுள்ளது. இது புதுச்சேரி மக்கள் இந்த அரசுக்குத் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவினாலேயே சாத்தியமாகி உள்ளது. பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மட்டுமே அரசின் செயல்திட்டங்களைச் செழுமைப்படுத்த உதவும் என்பதற்கு இது மிகச்சிறந்த உதாரணம் ஆகும்.

அனைத்து வகையிலும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் புதுச்சேரி மக்களுக்கு வழங்குவதில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. புதுச்சேரி மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும், அனைத்துப் பிரிவு மக்களின் சமுதாயப் பொருளாதார மேம்பாடும் எங்கள் அரசின் குறிக்கோள்களாகும். அந்த வகையில் இந்திய தேசத்தின் முன்னேற்றத்திற்காகவும் புதுச்சேரி மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற இந்த நன்னாளில் உறுதியேற்க வேண்டும் என்று உங்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில் எனது தலைமையிலான அரசிற்கு நீங்கள் அளித்துவரும் ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேவேளையில், மக்கள் சேவையை முதன்மையாகக் கொண்டு எங்கள் அரசு என்றும் தொடர்ந்து செயல்படும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

***வாழ்க பாரதம்!*** ***வெல்க புதுச்சேரி!!***

***நன்றி !*** ***வணக்கம் !!***

***ஜெய்ஹிந்த் !***

சுத்தமான பாரதம்

சுத்தத்தை நோக்கி மேலும் ஓர் அடி

அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 9.